**செய்தி வெளியீடு எண்: 030** **நாள்:11.05.2021**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (11–5–2021) கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் சட்டமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்தார். அவரை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலாளர் வரவேற்றனர்.

பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைவாணர் அரங்கிலுள்ள பேரவைத் தலைவர் அறைக்குச் சென்று, தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி அவர்களைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு அவை முன்னவர் திரு. துரைமுருகன் மற்றும் அமைச்சர் பெருமக்கள் உடனிருந்தனர்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் அவர்களிடம், பேரவைத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் திரு. மு. அப்பாவு மற்றும் பேரவைத் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் திரு. கு. பிச்சாண்டி ஆகியோரது வேட்பு மனுக்களை முன்மொழிந்தார். இந்த வேட்பு மனுக்களை மாண்புமிகு அவை முன்னவர் திரு. துரைமுருகன் அவர்கள் வழிமொழிந்தார்.

பின்னர், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ஜி.கே. மணி மற்றும் அக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**